1974 மார்ச் 9]

பரிசிலிக்கப்பட்டு தேவையான மாற்றம் செய்யப்படுகிறது. அப்படி எந்த இடத்தில் குறைபாடு இருந்தாலும் மாற்றுவதற்கு முயற்சிக்கலாம். ஆனல் உண்மையென்னவென்ருல், கைக்குத்தல் அரிசியினல் அதிகமாகப் பயன் கிடைக்கும் என்று கொண்டு வரப் பட்டது. ஆனல் விரும்பத்தகாத அளவில் சிரமமாக இருந்தால், கெடுதலாயிருந்தால் அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வரும்.

Medical Centre for Kottur-Adyar

* 335 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any medical centre is to be run at Kottur-Adyar Slum Clearance Colony in Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே,

(அ) அரசின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

ஆனல் வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் மூலமாக அங்கே ஒரு மருந்தகம் நடத்த முயற்சியிருக்கிறது. அதற்கு லயன்ஸ் கிளப் ஒரு கட்டிடம் தர முன் வந்திருக்கிருர்கள் என்று மாநகராட்சி மன்றம் தெரிவித்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: சார், காலனிகள் அமைக்கும்போழுதே மருத்துவ மனைகளுக்கான திட்டத்தையும் அதிலே சேர்த்து ப்ளாட் அலாட்மெண்ட் செய்து அமல் நடத்துவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட நல்ல எண்ணம் அரசுக்கு உண்டு. அந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்த ஏராளமான நிதி தேவைப்படுகிறது. நிதி கிடைப்பதற்கு அங்கத்தினர்கள் எந்தவிதமான வரியை விதிக்கலாம் என்று இந்தக் கூட்டத் தொடரில் சொன்னல் அதை மேற்கொள்ள முயற்சிக்கலாம்.

[1974 மார்ச் 9

திரு. இராம அரங்கண்ணல்: தலைவரவர்களே, பொதுவாக குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் தனியாருடைய ஒத்துழைப் போடு இப்படிப்பட்ட மருந்தகங்கள் திறக்கப்படுகின்றன. அதைப் போன்று கோட்டூர்புரத்தில் குடிசை மாற்று வாரியப் பகுதியில் வாலண்ட்ரி ஹெல்த் சர்வீஸ் சார்பிலே மருந்தகம் திறக்கப்பட்டு குடிசை மாற்று வாரியப் பகுதியில் நல்ல முறையில் நடந்து வருகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட நல்ல காரியங்களைச் சிலர் செய்கிறார்கள் என்பதற்காகத் தான், வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் என்ற அமைப்புக்கு ஆண்டு தோறும் அரசாங்கம் உதவித் தொகை வழங்கி வருகிறது.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, சீர்காழி மருத்துவமனை சம்பந்தமாக ஓராண்டுக்கு முன்னால் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களும், மருத்துவத் தலைமை அதிகாரியும் சொன்னார்கள். அதில் காலம் நீட்டிக்கொண்டே போகிறது. அதைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அதற்காக ஒரு இடத்தை அரசு கைக்கொள்ள வேண்டுமென்று முயற்சி மேற்கொள்ளப்பட்டு, சிறிய இடத்திற்கு ஏராளமான தொகை கொடுக்க வேண்டுமென்ற நிலையில் முடிவாகியிருந்தது. பிறகு அது நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக 5 ஏக்கர் கோயில் நிலம் அல்லது தர்மபுரம் மடத்தின் இடம் என்று கருதுகிறேன், குறைந்த விலையில் வாங்கும் முயற்சி நிறைவேறியிருக்கிறது. தொடர்ந்து வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில், படிப்படியாக முன்னேற்றம் வரும் என்பது அங்கத்தினர் அவர்களுக்கு நன்கு தெரியும், எனவே, அந்த முறையிலே எந்தெந்த ஆண்டு எந்தெந்த அளவில் நிதி கிடைக்கிறதோ அந்தந்த அளவில் வளர்ச்சி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

திரு. சி. ஆறுமுகம்: மருத்துவ மனைகள் அபிவிருத்திக்காக எந்தெந்தத் தலைப்புகளில் வரி போடலாம் என்று கூறும்படி அமைச்சர் அவர்கள் கேட்டார்கள்? பல தலைப்புகளின் கீழ் 'சர்சார்ஜ்' என்று வசூலிப்பது போல் மருத்துவ மனைகள் அபிவிருத்திக்காகவும் 'சர்சார்ஜ்' என்ற வகையில் வசூலித்து மருத்துவ மனைகளை அபிவிருத்தி செய்ய அரசு முன்வருமா?

1974 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எதிர்க்கட்சித் தலைவர்களை ஆலோசனை கேட்டால் ஆளும் கட்சி உறுப்பினர் ஆலோசனை சொல்லுவது பொருத்தமல்ல.

திரு. எம். சுரேந்திரன் : இந்தக் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புத் தொகுதிகளில் மருத்துவ வசதிகள் செய்வதைப் போல் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதிகளிலும் மருத்துவ வசதிகள் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா? அம்மாதிரிக் கட்டடங்கள் கட்டப்பட்ட இடங்களில் எவ்வளவு இடங்களில் மருத்துவ வசதி செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குடிசை மாற்று வாரியப் பணி நடைபெறுகின்ற இடத்தில் பொதுநலப் பணியாற்றுகின்ற சமூக நலச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பணியை ஆற்றுகிறார்கள். வீட்டு வசதி வாரியப் பகுதிகளிலும் இந்தப் பணியை அவர்கள் செய்வதற்கு எந்தவிதத் தடையும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : நாளுக்கு நாள் ஜனத்தொகை பெருகி வருகிறது. அதேபோல் நோயாளிகளும் பெருகி வருகிறார்கள். கட்டடங்களைக் கட்டி மருந்தகங்களை வைப்பதை விட சிக்கனப் படுத்தும் வகையில் நடமாடும் மருத்துவ மனைகளை மாவட்டந் தோறும் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் அவர்கள் கார் வைத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். நடமாடும் மருத்துவ மனையை கார் மூலமாக நடத்துவதில் இன்றுள்ள நிலைமையில் அதிகச் செலவாகும். இந்தக் காலத்தில் அது சிக்கனமானதாக அமையாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கோட்டூர்—அடையாறு போன்ற குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் துவக்கப்பட்ட மருந்தகங்களுக்குக் குடிசை மாற்று வாரியம் எவ்வளவு தொகை அளித்துள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பானது அல்ல. குடிசை மாற்று வாரியம் அதற்கான இடத்தை ஒதுக்கியிருக்கிறது என்ற காரணத்தால் தனிப்பட்டவர்கள் உதவி செய்து வருகிறார்கள்.